## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 178/2017

2025–ஆம் ஆண்டு பிப்பவரி மாதம் 12–ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி P.ரங்கேஸ்வரி.,B.Sc.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.02.2025 | கணவர் பெயர்: | ரவிச்சந்திரன் |
| பெயர்: | பானுமதி<br>(DW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சட்டநாதபுரம்<br>தெற்கு தெரு | சமயம்: | |
| சாதி: | | வயது : | 55/2025 |
| தொழில்: | | | |

**<u>குறுக்கு விசாரணை :12.02.2025</u>**

1, 2 வாதிகள் இரண்டு அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்து சீர்காழி டவுன் பிடாரி தெற்கு வீதியில் உள்ளது என்றாலும், 2–வது அயிட்ட சொத்து சட்டநாதபுரத்திலும் உள்ளது என்றாலும் சரிதான். சீர்காழி டவுன் பிடாரி தெற்கு வீதியில் உள்ள் முதல் அயிட்ட சொத்து எனது மாமனாரின் தகப்பனார் அப்பாதுரை பெயரில் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 2–வது அயிட்ட சொத்து சட்டநாதபுரத்தில் உள்ள சொத்து எனது கொழுந்தனார் ரவிச்சந்திரன் பெயரில் கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். எனது மாமனாரின் தகப்பனார் அப்பாதுரைக்கு பாலகிருஷண்ன், சுந்தரமூர்த்தி, கலியபெருாள், சம்மந்தம் ஆகிய நாள்வரும் வாரிசுகள் என்றால் சரிதான். எனது மாமனார் பெயர் சுந்தரமூர்த்தி என்றால் சரிதான். எனது மாமனார் தகப்பனார் பெயரில் கிரயம் பெற்று எனது மாமனாருக்கு ஒரு பாகம் கிடைத்தது என்றால் சரிதான். எனது மாமனார்

சுந்தரமூர்த்திக்கு எனது கணவர் கணேசன், எனது கொழுந்தனார் ரவிச்சந்திரன் மற்றும் வாதிகள் இருவரும் வாரிசுகள் என்றால் சரிதான். கொழுந்தனார் ரவிச்சந்திரன் திருமணம் செய்துகொள்ளாமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்த பின்னிட்டு என்னை திருமணம் செய்து கொண்டார். எனது கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பிறகு நானும் மற்ற பிரதிவாதிகளும் வாரிசுகள் என்றால் சரிதான். எனக்கும் எனது கொழுந்தனாருக்கும் திருமணம் நடந்ததற்கு ஆவணம் உண்டா என்றால் உறவினர்கள் முன்னிலையில் நடைப்பெற்றது. எனக்கும் எனது கொழுந்தனாருக்கும் திருமணம் ஆகவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவர் பெயர் கணேசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற ஆவணங்கள் அனைத்திலும் ரவிச்சந்திரன் பெயர்தான் உள்ளது. உண்மையில் எனக்கும் ரவிச்சந்திரனுக்கும் திருமணம் நடைப்பபெற்றிருந்தால் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவர் பெயர் ரவிச்சந்திரன் என்று குறிப்பிட்டு இருப்பேன் என்றால் எனது முதல் கணவர் பெயர் கணேசன் என்பதால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது முதல் நிரூபண வாக்குமூலத்தில் எனக்கும் எனது மாமியாருக்கும் மயிலாடுதுறை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. மேற்படி வழக்கு எனது மாமியார் மற்றும் மாமனார் என் மீது போட்ட வழக்கு என்றால் சரிதான். எனது மாமியார் மாமனார் மட்டுமே ரவிச்சந்திரனுக்கு வாரிசு என்று விளம்புகை பரிகாரம் கோரி எனக்கு எதிராக வழக்கு போட்டார்கள் என்றால் சரியால்ல. பணபலன் கேட்டு வழக்கு போட்டார்கள். என் மாமனார் ஓய்வூதியம் பெறுகிறார் என்றால் சரிதான். என்னை இறந்த ரவிச்சந்திரனுக்கு வாரிசாக மயிலாடுதுறை நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உத்தரவு பிற்ப்பித்து இருந்தால்

மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்பதால்தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொர்ச்சிகாக ஒத்தி வைக்கப்படுகிறது.